01.04.2026.

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண். 6/2026</u>

அ.சா.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சரவணன் | | |
| த/பெ | பாண்டுரங்கன் | | |
| கிராமம் | திருவெண்ணைநல்லூர் | தொழில் | உதவி ஆய்வாளர், சென்னை விமான நிலைய பாதுகாப்பு அதிகாரி |
| தாலுக்கா | திருவெண்ணைநல்லூர் | வயது | 52 /2026 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 01.04.2026. |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் சென்னை

விமான நிலையத்தில் பாதுகாப்பு பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05 வருடங்களுக்கு முன்பு இரவு எனது மகன் விஷால் என்பவரை யாரோ காரில் கடத்தி தாக்கியதாக அவர் தப்பிவந்து எங்களது உறவினர் தீபா என்பவரிடம் விவரம் சொல்லி நான் சென்று அவரை முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை பெற்று வந்தேன். பின்பு அவரை விசாரிக்க அவர் தன்னை யாரோ அடையாளம் தெரியாத நபர்கள் தாக்கி கடத்தியதாக சொன்னார். பின்பு நானும், என் மகன் விஷாலும், மறுநாள் காலை திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையம் சென்று விவரம் சொன்னோம். போலீசார் என் மகனிடம் எழுதாத வெள்ளை தாளில்

கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள். இது சம்பந்தமாக என்னை போலீசார் விசாரணை செய்யவில்லை. வுள்ளார்(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-

விழுப்புரத்தை சேர்ந்த கோவிந்தராஜ் என்பவரின் மகளும், மிதுன் என்கிற மிதுன் ராஜ், என்பவரின் சகோதரியுமான ராகவி என்பவரிடம் என் மகன் விஷால் பேச்சுவார்த்தையில் இருந்தார் என்றும், அது சம்மந்தமாக சந்தேகப்பட்ட மிதுன் பலமுறை என் மகனை எச்சரித்துள்ளார் என்றும், கடந்த 22/06/2021-ம் தேதி மாலை சுமார் 4.00 மணியளவில் நான் TN33 BP 2446 என்ற மோட்டார் சைக்கிளில் திருவெண்ணெய்நல்லூர் மணக்குள விநாயகர் மருத்துவமனை அருகே என் மகன் சென்று கொண்டிருந்த போது மிதுனின் நண்பர்களான அருணாச்சலம் மகன் அருண், ஏழுமலை மகன் அருண்குமார், ஆகியோர் என் மகனை வழிமறித்துள்ளார்கள் என்றும், என் மகனின் மோட்டார் சைக்கிளின் சாவியை எடுத்துக் கொண்டுள்ளார்கள் என்றும், என் மகனை அழைத்துக் கொண்டு மிதுனை பார்க்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு சென்றுள்ளார்கள் என்றும், அப்போது PY 05 E 2507 என்ற போலினோ கார் வந்து நின்றுள்ளது என்றும், அதில் விழுப்புரத்தை சேர்ந்த மிதுன் என்கிற மிதுன் ராஜ், கணேசன், இமான், விமல், ஆகியோர்கள் இருந்துள்ளார்கள் என்றும், அருளும், அருள்குமாரும், காருக்கு அடியில் என் மகனின் தலைமுடியை பிடித்து இழுத்து சென்றுள்ளார்கள் என்றும், மிதுன் ராஜ் ராகவியிடம் பழகுவதை விட மாட்டாயா? என்று கேட்டு சவுக்கு தடியால் தலையில் தாக்கியுள்ளார் என்றும், என் மகன் தடுத்த போது அந்த அடி அவரது இடது கையில் விழுந்ததுள்ளது என்றும், சுமார் 4.30 மணியளவில் என் மகனை கடத்தி சென்று விழுப்புரம் அருகே ரயில்வே டிராக் முடியும் இடத்தில் வைத்து கணேஷ் நைலான் கைற்றால் எனது இரு கைகளையும் கட்டிப்போட்டு, இரும்பு பைப்பால் கையில் ஓங்கி அடித்துள்ளார்கள் என்றும், இமான் நீ செத்துப் போடா தேவிடியா பையா என்று சொல்லி தடியால் இடது கைவிரல்களில் அடித்துள்ளார் என்றும், மாலை சுமார் 5-00 மணியளவில் மிதுன் ராஜ் வீட்டின் அருகில் அரை மணி நேரம் காருக்குள்ளேயே வைத்திருந்தார்கள் என்றும், அப்போது விமல் கையால் எனது மகனின் முதுகிலும், மார்பிலும், முகத்திலும், மாறி மாறி குத்தியுள்ளார்கள் என்றும், அப்போது இருட்டிவிட்டது என்றும், அவர்கள் ஏமாந்திருந்த நேரத்தில் என்

மகன் அங்கிருந்து தப்பித்துள்ளார் என்றும், பிறகு எனது உறவினர் தீபா வீட்டிற்கு சென்றுள்ளார் என்றும், பிறகு எனக்கு தகவல் தெரிவித்தும், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச சென்றேன் என்றும், பிறகு சிகிச்சை பெற்றுக் கொண்டு, மேற்படி விவரத்தை என்னிடம் சொன்னார் என்றும், மறுநாள் 23/06/2021 ம் தேதி காலை 6.30 மணியளவில் எழுத்து மூலமான புகாரை என் மகன் கொடுத்தார் என்றும், இது சம்பந்தமாக என்னை போலீசார் விசாரித்தார்கள் என்று சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இல்லை.

மறுவிசாரணை

இல்லை